**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 449 of 2025 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : மம்முட்டி

Father's Name : முனியாண்டி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் பீடம் பள்ளி, இபி ஆபிஸ் அருகே குடியிருந்து கொண்டு பழைய இரும்பு கடை வைத்து நடத்தி வருகிறேன். சம்பவ விபத்தில் இறந்த நிர்மலாதேவி அவர்களை சம்பவத்திற்கு முன்பாக எனக்கு தெரியாது. கடந்த 18.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 04.45 மணியளவில் நானும் செல்லக்கனி என்பவரும் கடையில் நின்றுகொண்டிருந்தபோது நிர்மலாதேவி தெற்கிலிருந்து வடக்காக அவரது இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் அதே திசையில் வந்த லாரி நிர்மலா தேவி இருசக்கர வாகனத்தின் மீது மோதி நிர்மலா தேவி இருசக்கர வாகனத்தின் மீது மோதி ஏறிவிட்டது.

2. மேலும் முன்பாக நின்று கொண்டிருந்த எனது இருசக்கர வாகனத்தின் மீதும் மோதி லாரி எனது கடையில் கவிழ்ந்து விட்டது. லாரியின் ஓட்டுநரை நான் சம்பவத்தின் பொழுது பார்க்கவில்லை. லாரியின் ஓட்டுநர் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார். காயம்அடைந்த

நிர்மலாதேவி அவர்களை அம்புலன்சின் மூலமாக மருத்துவனைக்கு கொண்டு சென்றார்கள். போலீசார் மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ தினத்தன்று நான் எனது கடையில் தான் இருந்தேன். கடையில் நானும் செல்லக்கனியும் இருந்தோம். என்னை போலீசார் விசாரித்த பொழுது எனது மனைவி கடையில் இருந்ததாக சொல்லிருந்தால் தவறு என்றால் சரியல்ல. எனது மனைவி மதுரை சென்று அன்றையதினம் கடைக்கு வந்திருந்தார், அவர் கடையில் பின்னால் இருந்தார். போலீசார் என்னை விசாரித்த பொழுது சம்பவத்தின் பொழுது செல்லக்கனி என்னுடன் இருந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் செல்லக்கனி உண்மையாக என்னுடன் இருந்திருந்தால் அன்றைய தினமே செல்லக்கனி என்னுடன் இருந்தார் என போலீசார் விசாரணையில் சொல்லி இருப்பேன் என்றும் அவ்வாறு செல்லக்கனி என்னுடன் இல்லாததால் தான் நான் போலீசார் விசாரணையில் செல்லக்கனி இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் தற்போது இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் சொல்வது போல் லாரியின் ஓட்டுனர் அன்றைய தினம் சம்பவ இடத்திலிருந்து ஓடவில்லை என்றும் அவரும் விபத்து நடந்ததை அடுத்து மயக்கம் அடைந்து விட்டார் என்றும் அவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றால் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்களா என நான் பார்க்கவில்லை. நான் முதல் விசாரணையில் என்னுடைய வாகனத்தின் மீதும் லாரி மோதியதாக சொல்லி உள்ள வாகனம் யாருடைய பெயரில் உள்ளது என்றால் வேறு ஒருவருடைய பெயரில் உள்ளது. நான் என்னுடைய பெயருக்கு பெயர் மாற்றம் செய்யவில்லை. ஆனால் நான் விலை கொடுத்து வாங்கினேன். தற்பொழுது அதாவது நான் எனது பெயரில் பெயர் மாற்றம் செய்து கொண்டேனா என்றால் வண்டி முழுவதும் சேதாரம் ஆகிவிட்டது. தற்பொழுது என்னிடம் வண்டி இல்லை.

3. சம்பவ இடமானது வளைவான பகுதி என்றால் சரிதான். லாரி FULL LOAD உடன் வந்தது என்றால் சரிதான். அவ்வழியாக நிறைய வாகனங்கள் சென்று வரும் என்றால் சரிதான். சம்பவ சாலையானது வளைவான சாலை என அவ்வழியாக செல்பவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக அதிக பாரம் கொண்டு வரும் பொழுது பொறுமைகாக தான் வருவார்கள் என்றால் சரிதான். ஆனால் விபத்து ஏற்படுத்திய லாரி அதிவேகமாக தான் வந்தது. விபத்து நான் நேரடியாக பார்த்ததாக சொல்லி உள்ள நிலையில் இது சம்பந்தமாக யாருக்கு தகவல் சொன்னேன் என்றால் நான் யாருக்கும் தகவல் சொல்லவில்லை. நான் விபத்து சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை

என்றும் அவ்வாறு பார்த்து இருந்தால் விபத்து எவ்வாறு நடந்தது என குறிப்பிட்டு சரியாக சொல்லி இருப்பேன் என்றும் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நேரடியாக பார்த்தேன்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.19 19:09:11 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**